**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவு**

**<u>நீச்சல் பயின்றவர்களுக்கு அரசு சான்றிதழ்</u>**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவு சார்பில் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் உள்ள **புதுப்பிக்கப்பட்ட** நீச்சல்குளத்தில் ஏப்ரல் 2017 முதல் ஜூன் 2017 முடிய கோடைகால சிறப்பு நீச்சல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. பயிற்சி வகுப்பில் சிறுவர், சிறுமியர், மாணவ/மாணவிகள் மற்றும் ஆண், பெண், ஆகிய அனைவருக்கும் **அதிரடி** சலுகை கட்டணமாக ரூ1000/- பெற்றுக்கொண்டு தாங்கள் விரும்பும் தினமும் ஒரு மணி நேரம் வீதம் 12 நாட்களில் 12 மணி நேரத்தில் நன்றாக நீந்தும் அளவிற்கு NIS பட்டம் பெற்ற பயிற்சியாளரால் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண்களுக்கு பெண் பயிற்சியாளரால் தினமும் காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தற்போது 01.04.2017 முதல் 14.04.2017 வரை நடைபெற்ற முதல் கட்ட பயிற்சி முகாமில் **33 பேர்** நன்றாக நீந்தும் அளவிற்கு பயிற்சி பெற்றார்கள். அவர்கள் அனைவருக்கும் 14.04.2017 காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட நீச்சல் கழக புரவலர் திரு.R.R.பொன்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கினார்கள். திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர். க. சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். நிகழ்சிக்கு திருநெல்வேலி மாவட்ட நீச்சல் கழக தலைவர் திரு. சேது திருமாறன், நீச்சல் கழக செயலாளர் திரு.லெட்சுமணன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள், நீச்சல் பயிற்சியாளர் திரு.கர்ணன், பெற்றோர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

<u>பயிற்சி நாட்கள் விபரம்</u>

1. 18.04.2017 முதல் 30.04.2017 முடிய (12 நாட்கள்)
2. 02.05.2017 முதல் 14.05.2017 முடிய (12 நாட்கள்)
3. 16.05.2017 முதல் 28.05.2017 முடிய (12 நாட்கள்)

பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் **அரசு சான்றிதழ்** வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்ரங்கில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு (தொலைபேசி எண். 0462-2572632, 9487353765) தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறாகள்.

இச்செய்தியினை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தெரிவித்தார்கள்

ஓம்/-

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி